
ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜியின்

# அரிய சொற்பொழிவுகள்



-: வெளியீடு :-

டாக்டர் திருமதி **மூ. அனந்தகிருஷ்ணா**

ஆதம்பாக்கம், சென்னை - 88. ☎ : 2245 0119 செல் : 92821 04459

ஓம்

தத் ஸத்

# ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமீஜீ

திருவாய் மலர்ந்தருளிய

# ஜீவாசாரம்

ஹே சாதுக்களே, இன்று (ஜீவாசாரம்) என்ற ஓர் அருமையான விஷயத்தைப் பற்றி உபந்நியசிக்க ஆரம்பித்து எனது மனமெழுந்து நின்றது. அதோடு சரீரமும் எழுந்து நிற்கிறது.

அறிஞர்களே, ஜீவாசாரங் கூற வேண்டுமானால் முதலில் ஜீவன் யார், எப்படிப்பட்டவன், எங்கிருப்பவன், எங்கு போகப் பட்டவன், இப்போது எங்கிருக்கிறான், இனி எங்கு போவான், எங்கு போய்க் கொண்டிருக்கிறான், எங்கு போக வேண்டும் என்ற விஷயங் களை முதலில் நிரூபணம் பண்ண வேண்டும். எதுபோல வெனில், மாம்பழஞ் சாப்பிட வேண்டுமானால் முதலில் மாம்பழ மின்னது, அது இன்ன இடத்திலிருப்பது, இன்ன விலை, என்பதை நிச்சயஞ் செய்ய வேண்டும். அப்புறந்தான் சாப்பிடுவது நிச்சயமாகும். அதுபோல, ஜீவாசாரங் கூற வேண்டுமானால் முதலில் ஜீவனுடைய எல்லா நிரூபணமுஞ் செய்ய வேண்டிய தவசியமாதலால் அதை நன்றாக விளங்கும்படியாகத் தெளிவான சொற்களாலும் உதாரமான வசனங்களாலும், கெம்பீரமான நோக்கத்தினாலும், சமரசமாகக் கூற ஆரம்பித்திருக்கிறேன்.

ஜீவன் என்பவன் யாரென்றால் ஜீவிக்கப்பட்டவன் என்பது பொருள் படும். எவ்விடத்தில் ஜீவிக்கப்படுபவனென்றால் சரீரத்தில் என்று சொல்லலாம். எந்தச் சரீரத்திலென்றாலோ ஸ்தூலம் சூட்சுமம் காரணம் எனச் சரீரம் மூன்று. அவற்றுள் ஸ்தூல சரீரமாவது, தோல் ரத்தம் மாமிசம் நரம்பு எலும்பு மூளை என இவ்வாறுஞ் சேர்ந்தது.

சூட்சும சரீரமாவது, வாக்கு பாணி பாதம் பாயுரு உபஸ்தம் என்று கருமேந்திரியமைந்து.

சுரோத்ரம் துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என ஞானேந்திரியமைந்து,

பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் என வாயுக்களைந்து,

மனம் புத்தி சித்தம் அகங்காரம் உள்ளம் என அந்தக்கரணம் ஐந்து.

ஆகதத்துவம் இருபது. இவ்விருபதுஞ் சேர்ந்ததெதுவோ அதுவேயாம்.

காரண சரீரமாவது, அவித்தையேயாம். இதற்கு மனம் சங்கற்பம் விகற்பம் நினைப்பு மயக்கம் மலம் பந்தம் தமசு மாயை விரிவு சங்கடம் ஜன்மம் என்ற நாமங்களுமுண்டு.

சில மதஸ்தர்கள் அகங்காரம் சித்தம் உள்ளம் என்ற மூன்றையு முள்ளடக்கிப் பதினேழு தத்துவமாகக் கூறுவதுமுண்டு. ஆனால் நாம் இங்கு விஷயத்தை மாத்திரம் கவனிப்போம். முற்கூறிய மூன்று சரீரங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவைகள். இம்மூவகைச் சரீரத்துக்குள்ளிலேயே அன்ன மயம், பிராண மயம், மனோ மயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் என்னும் ஐந்து கோசங்கள், சாக்கிரம் கனவு சுழுப்தி என்ற மூன்றவஸ்தைகள்.

சகல மதஸ்தர்களுக்குஞ் சம்மதமான தொண்ணூற்றாறு தத்துவமும்,

சைவ சித்தாந்தியர்க்குச் சம்மதமான முப்பத்தாறு தத்துவமும்,

வைஷ்ணவ சித்தாந்திகட்குச் சம்மதமான இருபத்து நான்கு தத்துவமும்,

சாங்கிய மதத்தினருக்குச் சம்மதமான இருபத்தைந்து தத்துவமும்,

புத்த மதத்தினருக்குச் சம்மதமான நாற்பத்தெட்டு தத்துவமும்,

வேதாந்தியர்க்குச் சம்மதமான இருபத்தெட்டுத் தத்துவமும் அடங்கியுள்ளன.

ஆனால், முற்கூறிய ஒவ்வொரு மதஸ்தர்களும் அவரவர் களுடைய மதானுசாரமான தத்துவத்தோடு கடைசியாய்ப்



பரமத்தையுஞ் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். மற்றோ, இம்மூவகைச் சரீரத்துடன் சம்பந்தித்து ஜீவிக்கப்பட்டவனுக்கு ஜீவனென்று பெயர். ஆனாலும் ஜீவனின் முடிவும் யதார்த்தமுமான சொரூபமும் பிரஹ்மமேயாகும். இதனால் என்ன சித்தித்த தென்றால் ஜீவனுடைய வடிவமே முடிவில் பரமென்று விளங்கியது. ஆனால் நாமெல்லோரு மிப்போது ஜீவர்கள். இப்போதே நம்முடைய சொரூபமும் பிரஹ்மமென்று நினைத்தால் நாம் கிருதகிருத்யனாகி விட்டோமா. அப்படி இப்போதே நாம் பிரஹ்மமென்று நினைத்து விட்டால் சாஸ்திரம் பழக வேண்டாம், நமக்கு யாதொரு விதி நிஷேதமில்லை என்ற நினைத்துக் கெட்டுவிட வேண்டிவரும். ஆதலால் நம்முடைய பக்குவத்துக்குத் தகுந்தபடி நம்மை நாம் பந்தமுடைய ஜீவனாகவே நினைக்க வேண்டும். அப்படி நினைப்பதால் நாம் முக்தியை அடைய ஓர் வேலி போலாகின்றது. அஃதெப்படி யெனில், நாம் நம்மை ஜீவனென்று நினைத்தால் ஐயோ நாம் பந்தத்திலுழலும் ஓர் அற்ப சுபாவமான ஜீவனாயிருக்கிறோமே என்று ஓர் வியாகூலமுண்டாகும். அப்படி அடிக்கடியுண்டாக பந்த நிவிர்த்திக்கு வழி தேடுகிறான். இதல்லாமல் நம்மை நாம் பிரஹ்மமாக நினைத்து விட்டால் பந்தமில் லாத நமக்குப் பந்த நிவிர்த்தியுமில்லையென்று முக்தியையடைய முயற்சியை விட்டுவிட வேண்டி வரும். ஆதலால் மஹா வாக்ய சிரவண மனன நிதித்தியாசனஞ் செய்யத்தக்க உத்தம அதிகாரம் வாய்ந்தவர்கள் மாத்திரம் நாம் பிரஹ்மமென்று நினைக்கலாம். அவர்கள் நினைப்பதால் நன்மையுண்டாகும். மற்றவர்கள் அப்படி நினைத்தால் பெருந் தீமையுண்டாகிறது. விஷய ஆசைகளோடு கூடி யிருக்கப்பட்ட நாம் அஹம் பிரஹ்மமென்னல் சங்கடமாக முடியும். விஷய ஆசைகளோடு கூடியிருப்பவர்களான நாம் அப்படி நினைத்தால் (பிரஹ்மை) மயக்கம் அடைந்து விடுவோம். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒருவனுக்கு மிகுந்த பசி உண்டாயிற்று, அவன் தன்னை வந்து கேட்போருக்கெல்லாம் சாப்பிட்டாயிற்று என்கிறான், அதனால் வருபவர்கள் இவன் சாப்பிட்டாயிற்று என்று இவனுக்குள்ள பசியை நிவர்த்திக்க எண்ணுவதற்கு நியாயமில்லை. அதனால் அவன் வருத்தமடைய வேண்டியதுதான், அதுபோல் நான் பிரஹ்மமென்று ஓர் ஜீவன் சொல்வானானால் தன்னைத் தானாக அறிய வேண்டிய பெரிய ஆத்திரம் அவனுக்குண்டாகிறதில்லை. ஆதலால், நாம் நம்மை எல்லோரும் ஜீவனாகவே நினைத்தல் வேண்டும், அப்படி ஜீவனாக நினைத்து நம்முடைய ஆதி ஆண்டவன் சொரூபத்தை

அறிய முயல வேண்டும். பின்புதான் ஜீவசொரூபம் இன்னதென்று தெளிவாக விளங்கும். அதற்கிடையில் இப்போதே ஜீவன் சொரூபம் பிரஹ்மமென்றாற் போதாது,

ஒரு போலீஸ் கான்ஸ்ரபில் சொரூபம் கவர்னர்தான் என்பது பொருந்தும். ஆனால் கான்ஸ்ரபில் கவர்னராகுமா? ஆகாது. கான்ஸ்ரபிலை விசாரித்துப் பார்க்கப் பார்க்க முடிவில் விளங்குவது கவர்னராகவே முடியும். அதுபோல் ஜீவனை விசாரித்துப் பார்க்கப் பார்க்க முடிவில் விளங்குவது பிரஹ்மமாகும். இப்போது ஜீவப் பிரஹ்ம அந்தரங்க விஷயங்களைப் பிரசங்கவாயிலாகக் கூறுவது எனக்கு வெட்கமாயிருந்த போதிலும் வெட்கந் தோற்றவில்லை. பின்னும், ஜீவனென்பவன் பிரஹ்மத்தின் ஓர் அம்ச பூதனென்றுஞ் சொல்லலாம். அல்லது பிரஹ்ம சொரூபத்தின் அலை, அல்லது பிரஹ்மத்தின் பிரதிபிம்பமென்றுஞ் சொல்லலாம். அல்லது பிரஹ்மத்தைப் பேதமாயறியுஞ் சங்கற்பமென்று சொல்வதும் உண்டு. அல்லது, அவித்யா ரூப சம்பந்தமென்றுஞ் சொல்வார்கள். இப்படிப் பலவித லக்ஷணத்தோடு கூடியதும் ஓர் ஜீவ லக்ஷணமேயாம். பின்னும் விசிஷ்டாத்வைதிகள் ஜீவனை அங்குஷ்டப் பிரமாண முடையவனாகச் சொல்லுகிறார்கள். இன்னும் சில மதஸ்தர்கள் ஜீவனை அணுரூபமாகக் கொள்கிறார்கள். அப்படி பிரபலமான உபநிஷதங்களுங் கூறுகின்றன. அப்படி முற்கூறிய மதஸ்தர்களும் பிரபல வேதாகமங்களுங் கூரியது உபாசனையின் பொருட்டேயாம். நம் முன்னோர்கள் கூறிய ஒவ்வொரு விஷயங்களும் அனுபவித்து எழுதினதேயன்றி வேறு வித்தியாசமல்ல. அவர்கள் கூறிய விஷயங்கள் நமக்குத் தெரியவில்லையானால் அவர்கள் மீது குற்றங் கூறுவது அழகல்ல. அப்படி கூறுவார் பெரு மூடர்களே யாகும். ஜீவன் அங்குஷ்டப் பிரமாணமுடையவன் அணுப்பிரமாணமுடைய வனென்று கூறியது எதனாலெனில் மந்த புத்தியுடைய மனிதர்கட்கு ஜீவனை ஓர் பிரமாணமுடையவனாகக் கற்பித்தாலொழிய அவர்களுக்கு ஜீவவுபாசனையிற் பிரவிருத்தி யுண்டாகிறதில்லை. ஆதலால் உபநிஷதங்கள் கூறிய அங்குஷ்டப் பிரமாண லக்ஷணங்கள் பொருந்தும். இதன் சங்தேக நிவர்த்தியாக வேண்டுமானால், நாம் ஜீவோபாசனை செய்துப் பார்த்து அனுபவித் தாலன்றி தெரியாது, தெரிகிறதில்லை, தெரியப் போகிறதுமில்லை, இதுவரை தெரிந்தவர்களுமில்லை. ஜீவனுடைய சொரூபம் பிரஹ்மப்



பிரதிபிம்பமென்பது தெரிவதற்கு வெளி திருஷ்டாந்தத்தில் :- ஓர் கண்ணாடியிருக்கிறது, அதைப் பார்ப்பவனொருவனிருக்கிறான், இவ்விரண்டுஞ்சேர கண்ணாடிக்குள்ளே ஓர் சாயை தோற்றுகிறது, அதுபோல், அவித்தை என்பது கண்ணாடி, அக்கண்ணாடியைப் பார்க்கும் புருஷன் ஈஸ்வரன், இவ்விரண்டுஞ்சேர அவித்யாப் பிரதி பிம்பமுண்டாகிறது. ஆக மூன்றும் அதாவது பிரஹ்மம், அவித்தை அவித்யாப் பிரதி பிம்பம் இவைகள் ஒருங்கு கூடியதுதான் ஜீவனுடைய அத்வைத பக்ஷமான லக்ஷணம். மற்றைய விசிஷ்டாத்வைத துவைத பக்ஷத்தில் ஜீவனொரு பதார்த்தத்தி லிருந்து உண்டானவன் அன்று, எப்போதும் அழியாத நித்தியனென் றும் அதற்கு வேண்டிய லக்ஷணங்கள் பிரபலமாய்க் கூறுவார். அவற்றை யிண்டு கூறப்படவில்லை, பின்னும் துவைதிகளும் மற்றையோரும் ஜீவனை வாஸ்தவ அனாதியென்றே ஒப்பியிருக் கிறார்கள். அப்படி அவர்கள் கூறுவது மிகுந்த உலக உபகாரமும், மிகுந்த நன்மையுமாக முடிகிறது. எப்படியென்றால் ஜீவன் நித்திய மென்று ஒருவனுக்கு நினைப்பு வருமானால் தன்னை ஜீவனாக நினைக்கிறவர்களுக்குத்தான் நித்தியமென்ற உணர்வுண்டாகிறது. அதனால்தான் எப்போதுமழியாத நித்திய சொரூபத்தை அடைகிறான். அத்வைதிகளோ வாஸ்தவத்தில் ஜீவன் கற்பித அனாதி யென்கிறார்கள். அது ஜீவ பாவனையுடையவர்களுக்கு விரோதமா கிறது. ஆதலால், ஆரம்ப காலத்தில் ஜீவனை நித்தியமென்றே ஒப்புக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொள்வதுமன்றி அனுஷ்டானத்திலு மிருக்க வேண்டும். பின்னும் துவைத விசிஷ்டாத்வைதிகள் கூறுகிற படி பிரகிருதி, உலகம், ஜீவன் என்ற இம்மூன்றையும் நித்திய மென்றதுதான் நானும் ஒப்புகிறேன். ஏனெனில் பிரகிருதியினின்று தோற்றியது இவ்வுலகம். இவ்வுலகமோ நமக்குச் சத்தாகவே தெரிகிறது. பின்னும் விஷய போக சுகங்களிலுமிச்சை யுண்டாகிறது. ஆதலால் இச்சையின் வழியாய்ப் போகப்பட்ட நாம் உலகமும் பிரதிகிருதியும் ஜீவனும் அனித்தியமென்று கூறுவது அசங்கதமாகும். பின்னோ அனித்ய உலகமும், அனித்திய விஷய சுகங்களும் நித்திய ஜீவனை இழுக்க முடியுமா? அப்படியிருக்க உலகபோக சுகங்கள் ஜீவனை இழுத்தே சென்றுக் கொண்டிருக்கின்றது. ஆதலால் உலக போக விஷய இச்சை நமக்கிருக்கும் வரை உலகமும் நித்தியமென்றே நம்ப வேண்டும். இப்போது அனித்தியமென்பது நம்முடைய பக்குவத்துக்குத் தகுந்ததல்ல. நாம் எந்த வார்த்தை பேசினாலும்

நம்முடைய பக்குவத்துக்குத் தகுந்தவாறு இருக்க வேண்டும். 10000 ரூபாய் ஸ்திதியுள்ள ஒருவன் தற்காலம் லக்ஷ ரூபாய்க் காரியத்தை நினைப்பதால் என்ன பிரயோஜனம்? ஒன்றுமில்லை. அவன் அந்தப் பதினாயிரம் ரூபாய்க்குள்ள காரித்தையேதான் பேச வேண்டும். அதுதான் பக்குவம். அதுதான் அழகு. ஆனதால் நாமும் நம்முடைய பக்குவத்துக்குத் தகுந்தபடி உலகமும் பிரகிருதியும் ஜீவனும் நித்தியமென்றே ஒப்புக் கொள்ள வேண்டும். பின்னும், உலகத்தை நித்தியமென்று நம்புவதால் ஓர் நன்மையுமுண்டாகிறது, எப்படியென்றால் ஒரு அஞ்ஞானியோ முமூக்ஷுவோ அப்யாசியோ உலகமில்லை, அனித்தியமென்றால் அஜாக்ரதை வந்துவிடும். அதனால் இவனை இவ்வுலகமே மாற்றி விடும். ஆதலால், நித்திய மென்று உலகத்தை நம்ப வேண்டும். நம்பினால் உலக விஷய போகங்களும் நித்தியம் என்று நினைப்புண்டாகி அதி ஜாக்கிரதை யாகவிருந்து உலகமிவனைப் பாதிக்கவிட மாட்டான். இதனால் என்ன சித்தித்ததென்றால் ஆத்ம ஞானிகள் மாத்திரம் உலகம், ஜீவன், பிரகிருதி மூன்றும் அனித்தியமென்று கூறலாம்.மற்றையோர்கள் நித்தியமென்றே கூற வேண்டும், நினைத்தலும் வேண்டும், ஆத்ம ஞானிகளுக்கு உலகமும் அதன் பகிரங்க போகங்களும் அந்தரங்க வாசனைகளும் மனதிற் பதிகிறதில்லை. ஏனென்றால் அதற்கு ஆதாரமான பிரகிருதி மண்டலத்தைக் கடந்த இடத்திற் சென்றுவிட்டதால் உலகம் அவர்களை மயக்குகிறதில்லை. நாம் உயர்ந்த ஞானிகள் பக்குவத்தை பேசி நம்முடைய யதார்த்த பக்குவமும் போய் வீணாகக் காலங் கழித்து வருகிறோம். ஐயோ இதென்ன அறியாமையோ. துவைதிகளும், விசிஷ்டாத்வைதிகளும் கூறியபடி ஜீவனும் பிரகிருதியும், உலகமும் நித்தியமென்றே நானுமிப்போது ஒப்புகிறேன் என்பது எல்லோருக்குந் தெரியும். அத்வைதிகளோ முன் கூறிய ஜீவன் உலகம் பிரகிருதி என்ற இம்மூன்றையுமனித்திய மென்றார்கள். அவர்கள் கூறுவதுஞ் சரியே. எப்படியெனில், அத்வைதம் என்றால் இரண்டில்லாதது என்று தாத்பரியமாகும். அதனால், இரண்டில்லாதெதுவோ அதையடைந்த வர்கள் அல்லது அதானவர்களுக்குத்தான் அத்வைதிகளென்று கூறலாம். அந்த அத்வைத நிலை புஸ்தகங்களை நன்றாகப் படித்ததினால் வந்துவிடாது. பின்னோ, ஜீவப் பிரஹ்ம ஐக்கிய கால அவதிரூபசாக்ஷியுந் தாண்டிய ஓர் நிலையுமற்ற அவாங் மனோவ கோசரமாகும், ஆதலால் அத்வைதிகளுக்கு அனுபவத்தில் எல்லாம்



பிரஹ்மமயமாகத் தோன்றுகிறபடியால் அச்சமயம் அந்த அனுபவிகள் உலகம், ஜீவன், பிரகிருதி மூன்றையும் அனித்தியமென்று நினைப்பதும், சொல்வதும் யதார்த்தமாகப் பொருந்தும். அத்வைதிகள் கூறுவது அந்த அத்வைத நிலையைப் பெற்றவர்களுக்குத்தான் சரி, விசிஷ்டாத்வைத துவைதிகள் கூறுவதோ உலகத்திலுள்ள சர்வ மனிதர்களுக்கும் உதவியாகின்றது. ஏனெனில் உலகத்தில் ஞானிகளோ அபுரூபம், மற்றையோர்கள்தான் நிறைந்திருக்கிறார்கள். ஆதலால், மிகுதியான பக்ஷமுடையவர்களுக்கு உதவியாயிருக்கிற படியால் இதுவே இச்சமயத்திற்கு மெனக்குஞ் சம்மதமே. பின்னும் ஜீவனென்பவன் ஓர் ஒழுங்கிநின்றுந் தவறியவன் அல்லது ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவன் என்று சொல்லலாம். எப்படியென்றால் பிரஹ்ம சொரூபத்தை மாறாக எண்ணுவதால் வந்த ஜீவன் ஆதலால் ஓர் ஒழுங்கிநின்றுந் தவறியவன், அவித்தைக்குக் கட்டுப்பட்டதால் ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவன் என்பதும் பொருந்துகிறது, சகோதரர்களே. இந்த ஜீவன் முதலில் எங்கிருந்தானென்பதை ஆராய்வோம் ஆராயுங்கால் தன்னிடத்தில்தானிருந்தானென்கிறேன். இதுவுமோர் பக்ஷம், மற்றோரார் ஈஸ்வரனிடத்திலிருந்தான் என்பார். இன்னோரார் மாயையிடத்திருந்தானென்பார், வேறோரார் பிரஹ்மமாகவே யிருந்தானென்பார், மற்றோரார் பிரகிருதியாகவே இருந்தானென்பார், பின்னோ நாம் இப்போது மாயையின் வசமாக ஈஸ்வர சுபாவத்திலேயே இருந்தானென்பதை நம்புவோம். ஆதலால், ஜீவன் ஆதியிலிருந்த இடம் அகண்ட இடமாகும், இனி ஜீவன் எங்கு போகப்பட்டவனென்பதை விசாரிப்போமாயின் ஜீவனோடு சேர்ந்து நாமும் போய் பார்த்தால் தான் அபரோக்ஷமாகத் தெரியும். ஆனால் இன்னொன்று, ஜீவனெங்கிருந்து வந்தானோ அங்குதான் போக வேண்டுமென்பதுதான் சர்வ பிரமாணிகளுமொப்பியிருக்கிறார்கள். ஆதலால், ஆதியில் ஜீவனிருந்த இடம் பிரஹ்மமாகையால் போய்ச் சேருகிற இடமு மதுவென்றேதான் சொல்ல வேண்டும். அவனிப் போதிருக்கிறதும் அதுவே, இனிப் போகப் போகிறதுமந்த இடமே. ஆனால் தற்காலம் அப்படியென்றெண்ணுகிறோம். இப்போது இவ்விஷயங்களையெல்லாம் நான் சொல்லுகிறேன் நீங்கள் கேட்கிறீர்கள். ஆனால் முழு நம்பிக்கையும் பூராச் சந்தேக நிவர்த்தியு முண்டாகிறதில்லை. ஏனெனில், எந்த விஷயத்தையும் அபரோக்ஷ மாக அனுபவித்தாலன்றி யதார்த்தமான சந்தேகந் தீருகிறதே யில்லை.அதற்கு முதலில் பரோக்ஷமாகப் பாவனை செய்ய வேண்டும்.

அதன்பின்புதான் அபரோக்ஷமுண்டாகும். பரோக்ஷமாவதென்ன வென்றால் எந்தக் காரியத்தை முடிக்க வேண்டுமானாலும், அந்தக் காரியத்தை முதலில் மனதில் நினைத்து உறுதிப்படுத்துவதாகும். பின் அந்த விஷய முயற்சி செய்வதும் முடிப்பதும் அபரோக்ஷமாகும். ஆதலால், ஜீவனைப் பற்றி அவனிருப்பிடம் அவன் லக்ஷண முதலியவைகளைப் பரோஷமாக தெரிந்து கொண்டாற்றான் அபரோக்ஷமாக அறிய ஏதுவுண்டாகும். பின்னும் ஜீவனிருப்பிட மாவது, ஸ்தூல சரீரத்தில் வியாபித்த சொரூபனான இருதய மத்தியில் மனதினுள்ளே வசிப்பவனென்றுஞ் சொல்லலாம் அதை அவரவர்கள் மதானுசாரமாக அவரவர்கள் கண்டு கொள்ளட்டும். பின்னோ, மாயை யின் சொரூபத்தை அதாவது அதன் வல்லபத்தை யதார்த்தமாகத் தெரிந்தாலொழிய ஒருவருக்கும் மாயையின் சுபாவத்தை மீறி அப்பாற்போக முடியாது. ஆத்மதரிசனமுங் கிடைக்காது. மாயாவல்லப மாவது யாதென்றால் நம்மை நாமறியாமல் செய்வித்துக் கொண்டி ருக்கிற தெதுவோ அதுவேயாம். இம்மாயை நமக்குத் தெரியாமல் நம்மை மயக்கி விடுகிறது. பின்னும் மாயை யென்பது வேறொன்று மல்ல. நன்றாய் விசாரித்துப் பார்க்குங்கால் நம்மிடத்துண்டான நம்முடைய மனதேயாகும். இதை அவரவர்கள் அனுபவத்தில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆதலால், உலகமும் பிரகிருதியும் ஜீவனும் அனித்திய மென்பது அத்வைதிகளுக்குப் பொருந்தும். நித்தியமென்பது துவைத விசிஷ்டாத்வைதிகளுக்குப் பொருந்தும். பிரஹ்மத்தைத்தவிர அன்னியத் தோற்றமில்லாத சுவானுபவம் வந்தவர்கள் மாத்திரம் எல்லாவற்றையும் அனித்தியமென்னலாம். பின்னும் பிரஹ்மத்தைத்தவிர அன்னியமாக ஜீவனும், பிரகிருதியும், உலகமு மில்லாமையால் இவைகளும் நித்தியமென்பது அத்வைதி களுக்கும் பொருத்தமாகிறது. அப்படியானால் விசிஷ்டாத்வைதி களும் துவைதிகளுஞ் சொல்வதே முடிவிலும் நிற்கிறது. ஆதலால் எனக்கும் துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் மிகுந்த பிரியம். பின்னும், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், என்னுமூன்றும் மூன்றல்ல ஒன்றுதான். அறியாமல் மூன்றென்பார்கள். ஒரே பிரஹ்மத்தை ஒரு சாரார் ஒன்றென்கிறார்கள். மற்றோரார் மூன்றென் கிறார்கள். இன்னோராரிரண்டென்கிறார்கள் இப்படி ஸ்தாபிப்பதும் பிரஹ்மத்தினிடத்திற்றான். அங்கு சென்று பிரஹ்மம் ஒன்றாயிருக் கிறது, அல்லது இரண்டாயிருக்கிறது அல்லது மூன்றாயிருக்கிறது என்று கூறுபவர்கள் யதார்த்தமான அனுபவிகளல்லவென்பதே எனது



அபிப்பிராயம். ஏனென்றால், பிரஹ்மம் வாக்கு மனது இவைகளுக் கெட்டாதென்று உபநிஷத் வாக்கியங்கள் கூறுகிறபடியால் இன்னபடியென்று பிரஹ்ம நிச்சயஞ் செய்ய முடியாது. முடியுமானால் அது பிரஹ்மமுமல்ல. பின்னோ, அந்த வஸ்து ஒன்றோ இரண்டோ மூன்றோ நாம் அனுபவித்துப் பார்ப்போம், அது உள்ளபடி தானிருக் கும் இதைப் பற்றி விவரிக்க இப்போது எனக்கு அபிப்ராயமில்லை. பின்னும், சங்கர, ராமானுஜ, மத்வாதியர்கள் மூவரும் மூன்று விதமாகப் பரதத்துவ நிரூபணம் பண்ணியிருக்கிறார்களே யெனில், அம்மூவரபிப்பிராயமும் மூன்றல்ல, ஒன்றேயாம். எப்படியெனில் அவரவர் அவதார காலங்களில் அந்தந்தப்படி ஸ்தாபிக்க வேண்டி யிருந்தது. பின்னும் இக்காலத்தில் விவேகானந்தர் அவர் சரீர முழுதும் உடுப்புக் போட்டுக் கொண்டிருந்தார். அதனால் அவர் அபிப்பிராயம் முன் ஞானிகளுக்கு விரோதமென்று சொல்லலாமா? ஏனெனில் இக்காலத்திற்கேற்ற நாகரீகத்துடன் வேதாந்த சித்தாந்த ஸ்தாபனஞ் செய்ய வேண்டியிருந்தது. அதனால் அபிப்பிராயம் வேறல்ல ஒன்று தான். அதுபோல மூவரபிப்பிராயமும் ஒன்றென்பதே திண்ணமாகும். பின்னும் ஓர் அற்ப சக்தியுள்ள நாம் இவ்வளவு விஷயங்களும் பேச்சும் பேசும்போது மஹாமேதாவிகளும் அவதார புருஷர்களுமான திரிமதஸ்தாபனர்களுடைய சக்தியை எவரால் கூற முடியும். அவர்களுடைய அந்தரங்க அப்பிப்பிராயங்களைக் கண்டுபிடிக்க நம்மால் முடியுமா? முடிகிறதில்லை. அதனால் அவர்கள் சித்தாந்த விஷயமும் தெரிகிறதில்லை, நாம் பேசுவதும் நடப்பதும், இருப்பதும், செய்வதும் நம் முன்னவர்களான மஹான்கள் அனுஷ்டானத்திற் கொத்திருக்க வேண்டும். அதாவது அவர்கள் அனுஷ்டித்த ஒவ்வொரு விஷயங்களையும் இன்ன காரணத்திற்காக அனுஷ்டித்தார்களென்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதை நாம் தெரிந்து கொள்ளாமல் அவர்கள்மீது குற்றம் கூறுவது பெருந்தப்பு. இக்காலத் தில் அதுதான் நிரம்பி இருக்கிறது. அது பெரிய மூடத்தனந்தான். ஏனெனில் ஓர் சாதாரணமான ஜட்ஜி. ஓர் ஜட்ஜ்மெண்டு எழுதினால் அதனுடைய அபிப்பிராயங்களும் அந்த ஜட்ஜியின் அபிப்பிராயங் களும்தெரிகிறதில்லை.இப்படியிருக்க மூடர்களான நமக்கு மஹான்கள் அபிப்பிராயமும் அவர்கள் அனுசரித்த மார்க்கங்களும் நமக்குத் தெரியுமா? தெரிகிறதில்லை. ஆனதால் அவர்கள்மீதும் அவர்களனுஷ்டித்த சித்தாந்தத்தின்மீதும் நம்பிக்கை வைத்து அதன்படி அனுஷ்டித்தலும் வேண்டும். இதுவுமில்லாமற் போனால்

வேறு கெதியில்லை. பின், ஜீவன் நித்தியமாயிருந்தாலும் அனித்தியமாயிருந்தாலும் அதன் சொருபத்தைத் தெரிந்து கொள்வோம். அப்புறந்தான் அதற்குமப்பாலான ஆத்மாவின் சொரூபம் தெரிய வரும்.ஆதலால் நாமெல்லோரும் ஜீவன் இத்தன்மையை யுடையவன், இன்ன சக்தியையுடையவன், இன்ன இடத்திலிருப் பவன், இன்ன இடத்திற்குப் போகப்பட்டவன், இன்ன சாவகாசன் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது ஜீவாசாரம் முழுவதும் பேச வேண்டுமானால் முடியாது முற்கால மஹரிஷிகள் ஜீவசாரத்தைக் கண்டுபிடிக்க அநேக ஆயிரக்கணக் கான ஆண்டுகள் உழைத்திருக்கிறதாகத் தெரிகிறது. இதை இப்பிரசங்க காலத்தில் அரைமணி நேரத்திற்குள் சொல்லி விடுவது சாத்தியமாகுங் காரியமன்று. ஆனாலும், ஜீவன் என்ற ஓர் வஸ்து உண்டு, அதை அறிந்து கொள்ள வேண்டியதவசியம் என்பதாவது எல்லோருக்குந் தெரிந்திருக்கலாம். இன்னும் இதன் விரிவை அதிகமாக அறிய விருப்பமுடையவர்கள் ஏகாந்த ஸ்தலத்திலுள்ள ஏகாந்தியர்களைக் கண்டு கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம். பின் அவரவர்களுக்கு அனுபவம் வந்தாலும் தெரியும். ஆனபடியால் எல்லோரும் ஜன்மநாச உபாயங்களைப் பற்பல வழிகளாகத் தெரிந்து அதை அடிக்கடி நினைத்து அந்த நினைப்பை அப்படியே நிலைக்கச் செய்து சர்வமத சம்மதமான சாந்த சைதன்யத்தையடைய முயற்சி செய்து அடைவீர்க ளென்று பரமேஸ்வரனைப் பன்முறை பிரார்த்திக்கின்றனம்.

இவ்வகை இது முற்றிற்று.

-: ஓம் தத் ஸத் :-



# மாயாவாத வேதாந்த கண்டனம்

சுத்தாத்வைத சொருபராயும் காளகண்ட திரிநேத்திர சூலபாணி பார்வதி சமேதராயும் பரிபூரண நிசானந்த வடிவராயும் வாசாம கோசராயும் சர்வ வியாபகராயும் சர்வமத சாந்த சொருபராயு மிருக்கப்பட்ட யாதொரு பரமேஸ்வரனுண்டோ அன்னவரின் பரிபூரண கிருபையால் அவரது உபய பாதார விந்தங்களை நமஸ்கரித்து இந்நூலை ஆரம்பிக்கிறேன்.

அன்பர்களே!

துக்கமில்லாத சுக சொரூபமான பரம பதத்தை அடைவதற்குச் சாதகமான பல மதங்கள் உலகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அவையாவன :

சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தேயம், காபாலிகம் என்னுமுட்சமயமாறும்; பாஞ்சராத்ரம், வைகானசம், பாதஞ்சலம், யோகம், பாட்டம், பிரபாகரம், புத்தம், ஜைனம், சமணம், உலோகாயதம் முதலிய பல்வேறு (இன்னுமநேக) மதங்களிருக் கின்றன. அவற்றை இங்கு கூறப்படவில்லை. பின்னோ வேதாந்த மதமென்று ஒன்று இருக்கின்றது. ஒவ்வொரு மதவாதியர்களும் அவரவர் மத முடிவே மோக்ஷமென்கிறார்கள். இவற்றில் எதை நிச்சயஞ் செய்து நம்புவதென்றாலோ எல்லாவற்றையுந்தான் நம்ப வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவரவர் கர்மானுசாரமாக ஈஸ்வரன் ஒவ்வொரு மதங்களிலும் பக்தி வரும்படி செய்து நிலை நிறுத்துகிறார். ஒருவன் நாஸ்திக மதத்திலிருக்கிறான். இன்னொருவன் ஆஸ்திக மத்திலிருக்கிறான். ஆஸ்திகன் நாஸ்திகனை ஒன்றுந் தெறியாதவ னென்று நினைக்கிறான். நாஸ்திகன் ஆஸ்திகனையும் அப்படியே நினைக்கிறான். ஏனெனில் அவரவர் மனதிற்கு அதுவதுவே பெரிதாக புலப்படுகின்றது. எல்லா மதஸ்தர்களுடைய மனதிலிருந்தும் ஊட்டுவிப்பது ஒரே கடவுள்தான். ஆனால், நாஸ்திக மதம் முதல் ஞான மதம் வரையுள்ள 1500 மதங்களிலும் ஒருவன் இருந்தே தீர வேண்டும். ஒருவன் பூரண ஞானமடைந்து விட்டானென்றால் அனந்த ஜன்மங்களாக அனந்த மதங்களிலிருந்தே கடைசியில் ஞான மதத்திற்கு வந்திருக்க வேண்டும். ஒருவன் திடீரென்று

சென்னைக்குச் சென்று பி.ஏ. பாஸ் பண்ணிவிட்டானென்றால் மற்றைய ஸ்கூல்களில் பிரைமெரி முதல் எப்.ஏ. வரை பாஸ் செய் திருப்பானென்பதை கேட்கவா வேண்டும். பின்னும் இம்மதங்களில் யதார்த்த மதமென்றும், போலி மதமென்றும் பல இருக்கின்றன. அதாவது, வேதாந்தம், வேதாந்தப் போலி, சைவம், சைவப் போலி, வைணவம், வைணவப் போலி அல்லது ஒன்றொன்றின் மாயாவாதம் என்றுஞ் சொல்லலாம். அதில் இக்காலத்து எல்லாவித மாயா வாதமும் எல்லா நாடுகளிலும் நிரம்பியிருக்கின்றன. எதார்த்தமான அத்வைத அனுபவம், சாஸ்திரம், பக்தி, கருமம், யோகம், ஒழுக்கம், கேள்வி, சங்கம் இவைகள் தற்காலங் கிடைப்பது மிகவும் அருமையா யிருக் கின்றது. இப்படியே சைவம் வைணவம் முதலிய எல்லா மதங்களிலு மிருக்கின்றன. அவற்றில் மாயா வாத வேதாந்திகளின் நடவடிக்கை களை மாத்திரமிங்கு கவனிப்போம்.

வேதாந்த சாஸ்திரங்களில் சரியை கிரியை யோகம் என்னும் இம்மூன்று படியுந்தாண்டிய பக்குவிகள்தான் வேதாந்த நூல் கற்கலாமென கூறப்பட்டிருக்கிறது. அபக்குவிகள் கற்றால் பெருந் தீமையை விளைவித்து விடுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வசனம் மிகுந்த அனுபவமானதுதான். ஏனெனில் மூன்று படியுந் தாண்டிய பக்குவிகள் தவிர மற்றைய அபக்குவிகள் வேதாந்த நூல் பார்ப்பார்களாயின் உடனே தான் பிரமமென்று நினைக்கிறார்கள். சொல்லுகிறார்கள். அப்படி நினைத்த மாத்திரத்தில் தான் ஒன்றுஞ் செய்ய வேண்டியதில்லாத கிருத கிருத்தியத் தன்மை வந்து விட்டதென்று நினைக்கிறான். எல்லாவித சாதன சாத்திய முடிவான அனுபவம் தனக்கு வந்துவிட்டதாக நினைக்கிறான். ஞான முடிவை வாயினால் மாத்திரம் நன்றாகப் பேசி விடுகிறார்கள். சரீரம் இந்திரியம், பிராணன், மனது, புத்தி, ஆத்மா முதலிய இவைகளாற் செய்யக் கூடிய கர்மங்கள் அவற்றின் பிரயோஜனங்கள் அனுபவ தோற்றங்கள் இவை ஒன்றும் நமக்கல்லவென்றும் கூறுகிறார்கள். இன்னோர் மனதுவிடய சம்பந்தமாக விருப்பதால் அதோடு வேதாந்தம் படித்தால் இன்னுமதிக மாக விடய வாதையில் செல்லுகின்றது. அப்படி மனது விடயங்களிற் செல்லும்போது நாமொன்றுஞ் செய்யவில்லயே நமக்கு அன்னியமான ஜீவன், புத்தி, மனது, பிராணன், இந்திரியம், சரீரம் இவைகள்தான் செய்கின்றன. நாம் செய்யவே யில்லை. நமக்கொன்றுமில்லை என்று மதனில் நிச்சயித்து அசுப காரியங்களில் மிகுதியாய்ப் பிரவேசித்து



விடுகிறார்கள். பின்னும் ஆலய வழிபாடு, அடியார்க் குபசரித்தல், சாதுக்களுக்கு அன்னமளித்தல், ஸ்தல யாத்திரை, தீர்த்த யாத்திரை, மூர்த்தி தரிசனம், பெரியவாள் தரிசனம், சாது சங்கம், மஹான்கள் சரித்திரம் படித்தல் விபூதி உருத்திராக்ஷமணிதல், ஊர்த்வ புண்டரந்தரித்தல் இவ்வித காரியங்களில் இம்மாயாவாதிகள் செல்லுகிறதில்லை. ஏனெனில் அவர்கள்தானே சிவமாகவும் அற்ப அறிவுடையோர் செய்யும் மேற்கூறிய கிரியைகளுக்கு நாமேன் போக வேண்டுமென்றும் நினைக்கிறார்கள். இதனால் இவர்கள் வேதாந்தம் படிப்பதற்கு முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது அதிக விஷய விருப்பமும் சோம்பலும் உண்டாகி விட்டது. பின் இம்மாயாவாதி களோடு ஒரு மணி நேரம் சேர்ந்த நல்மனதுடையவர்களும் அவர் களுடைய நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். பின்னும் பகவானிடத் தில் கொஞ்சம் பக்தி உள்ளவர்களையும் இம்மாயாவாதிகள் அழைத்து நீயேன் ஆலய தரிசனம் செய்கிறாய். அங்கிருப்பவன் யார் நம்மிடத்தி லிருந்துண்டான ஓர் கற்பித விக்கிரகம் அதை நாம் பணிதல் கூடுமா? நாம் அழியாத பரம சிவமாச்சுதே என்று புகட்டி அதி சீக்கிரத்தில் நாஸ்தி புத்தியுண்டு பண்ணி விடுகிறார்கள். இதோடுமல்லாமல் பெரிய புராணம், திருவிளையாடல், தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி, குருபரம்பரை முதலிய இம்மஹா நூல்களை யாராவது பக்தி சிரத்தையுடன் அப்பியாசித்து வருவார்களாயின் இம்மாயாவாதிகள் அவர்களைக் கண்டு ஏ மூடர்காள் இப்படி வீணான புஸ்தகங்களைப் படித்ததினால் யாது பிரயோஜனம், அப்புஸ்தங்களிற் கூறியவர் களுக்கே அதாவது 64 நாயன்மார்களுக்கும் ஆழ்வாராதியர்களுக்குமே பூரண ஞானங் கிடையாதிருக்க அன்னவர்கள் நூலைக்கற்று யாது பயனடையப் போகிறீர்கள். ஏனெனில் முற்கூறியவர்கள் தன்னை ஓர் ஜீவாத்மாவாகவும் தாழ்ந்த நிலைமையாய்த் தன்னை நினைத்து பாடியிருக்கிறார்கள். ஆதலால் பரம மோக்ஷத்தை அடைய விரும்புவீர் களாயின் வாசிஷ்டம் கைவல்யம் முதலிய பிரபல வேதாந்த நூல் களை படியுங்களென்று போதித்து அவர்களுக்கிருக்கிற எதார்த்த பக்தி, சிரத்தை, உபாசனை இவைகளைக் கெடுத்து விடுகிறார்கள். இப்படி இவர்கள் கூறுவதால் மிகுந்த யுக்தி, திடம், ஞானம், உண்மை முதலிய சத்குணங்கள் பூரணமாய் இருப்பவர்கள் மனது கறைவ தில்லை. அற்ப பக்தி, அதைரிய முடையவர்கள் மனது நழுவி பாஷாண்டத் தன்மையை அடைகிறார்கள். அதற்குதான் மாயாவாதப் படுகுழி என்ற கூறும் வழக்கம். பின்னும் கிறிஸ்தவர்கள் முகம்மத்தி

யற்களாவது கடவுள் ஒருவர் உண்டு அன்னவருக்கு அடங்கி நடக்க வேண்டுமென்கிறார்கள். இம்மாயாவாதிகட்கோ அது கிடையாது. மற்றோ இம்மாயாவாதிகள் நாமே கடவுள். நம்மை யன்றி வேறு யாதொரு பதார்த்தமுங் கிடையாது. நாம் யாருக்கடங்கி நடக்க வேண்டும். இல்லை யாதலால் நாம் என்ன செய்தாலும் செய்யலா மென்று அளவு கடந்த அசுப காரியங்களைச் செய்து விடுகிறார்கள். இம்மாயாவாதிகளைக் காட்டிலும் கொடும்பாவிகள் உலகத்திலில்லை யென்றே நினைக்கிறேன். ஏனெனில், வேதாந்தத்தை வாயிற் பேசி வீண் செயல்களைச் செய்து ஈஸ்வரப் பிரசாத அபாத்திரர்களாய் விடுவது மன்றி ஏனையோர்களையும் கெடுக்கிறார்கள். பின்னும் ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகளும் மாணிக்க வாசக ஸ்வாமிகளும் மாயாவாத கண்டனம் செய்திருக்கிறார்கள். நம்மாழ்வாருமப்படியே ஓர் பாசுரத்தில் கண்டித்திருக்கிறார். ஆதலால் ஈஸ்வரனை யடைய விரும்பும் ஒவ்வொருவர்களும் மேற்கூறிய மாயாவாதப் படுகுழியில் விழாமல் எதார்த்தமான சுத்தாத்வைத சைவ சித்தாந்த சமய சொரூப தக்ஷிணா மூர்த்தி குருபாரம் பரிய ஆசாரிய அனுஷ்டான மார்க்கத்தில் நின்று சரியாதி நான்கு பாதங்களையும் ஒழுங்காயனுஷ்டித்து ஆணவம். மாயை. கன்மம் என்னும் மும்மலங்களையும் பரமேஸ்வரனது பூரண கிருபையால் நிவர்த்தித்து அகண்ட பரிபூரண நித்தியானந்த சாக்ஷாத்கார சைதன்ய சொரூபராகிய யாதொரு பரமேஸ்வரருண்டோ அன்னவரை யடையுமாறு அவரையே பன்முறை பிரார்த்திக்கின்றனம்.

-: ஓம் தத் ஸத் :-



8-5-1917 ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில் உபந்நியசித்த

# பிரஹ்மோபந்நியாஸம்

ஹே ஆத்மாக்களே!

இன்று மாலை ரெயில்வே பிளாட்பாரத்தில் நின்று கொண்டு 20 நிமிஷ நேரம் யதார்த்த ஞான விஷயங்களைச் சுருக்கமாய் உங்களுக்குப் போதிக்க ஆரம்பித்திருக்கிறேன். இது இனிது முடியுமாறு அகண்டாகார ஆனந்த சொரூப சைதன்ய வஸ்துவை இப்போதுதான் நினைத்தேனென்று எண்ணாதீர்கள். எப்போதும் நாம் அதுவாகவும், அது நாமாகவும் இருக்கிறோம். அப்படியிருந்தும் நாம் நம்மை ஓர் ஜீவனாகவும் மனுஷ்யனாகவும் ஓர் சாதிக்குள்ளகப்பட்ட வனாகவும் ஓர் வருணத்தானாகவும் ஓர் ஆச்சிரமியாகவும் நினைத்து, நம்முடைய யதார்த்த சொரூபத்தை மறந்து ஜன்மப் படுகுழியிலாழ் கிறோம். அப்படி நினைப்பதும் ஜன்மவிருத்திக்கு ஓர்வித நன்மை தான். அது உண்மை ஞானத்துக்கு நேர் விரோதமாயிருக்கிறது. எப்படியெனில், சர்வ தத்துவங்களையும் கடந்த இடத்தில் பிரஹ்ம தரிசன முண்டாகிறது. அதாவது, அத்வைதிகள் கூறுகிறபடி இருபத் தெட்டாவது தத்துவமும், விசிட்டாத்துவைதிகள் கூறும் இருபத்து நாலாவது தத்துவமும், சாங்கியர்கள் கூறுமிருபத்தைந்தாவது தத்துவ மும் கடவுளென்கிறார்கள். யார் எப்படி தத்துவக் கணக்கு சொன்ன போதிலும் எப்படியாவது தத்துவங்களைக் கடந்தே தீர வேண்டும். அப்படித் தத்துவங்களைக் கடக்க வேண்டுமானால் ஸ்தூல சரீரத்துளாரோபிதமான வருணாச்சிரமங்கள், அவற்றின் பிரிவுகள், அவற்றின் கட்டுப்பாடுகள், இவைகளில் மனம் வைக்காமல் அப்பா லுள்ள தத்துவங்களைத் தள்ளி அப்பாற் செல்ல வேண்டும். அதன் விவரங்களை விவரிக்க இப்பொழுது சமயமில்லாததனால் இன்னொருதரம் வரும்போது சொல்லுகிறேன். பின்னும் வருணாச் சிரம தருமங்கள் எதுவரை அனுஷ்டிக்க வேண்டுமென்றாலோ, உண்மை ஞானம் வரும் வரையிலும், துரியானுபவம் வரும்வரையும் அல்லது உலகத்துள்ள ஓர் மதம், ஓர் ஜாதி, ஓரரசன், ஓர் வீடு, ஓர் செல்வம் இன்னு மனேகமாயுள்ள சர்வபந்தங்களையுங் கடக்கும் வரையும், அல்லது சர்வ இச்சைகளும் விடும்வரையிலும், தன்னுடைய யதார்த்த நிலை தெரியும் வரையும், எங்கும் ஒரே சம்பாவனை வரும் வரையும், இருதயத்திலுள்ள துக்கம்

நீங்கும்வரையும், அதாவது இருதயம் சுத்தமாகவும் வரையும் அனுஷ்டடிக்க வேண்டும். அப்பாலும் அனுஷ்டிக்கக் கூடாது. ஏனெனில், அவனுக்குண்டான ஞானத்தையுங் கெடுத்துவிடும். அது எப்படிக் கெடுக்குமென்றால், ஒருவன் ஓர் பாழுங் கிணற்றில் வீழ்ந்து விட்டான், அவன் ஓர் வேரைப்பற்றிக் கொண்டு நிற்கிறான். அப்போது வேறோர் மனிதன் கிணற்றின் மேலிருந்து ஓர் பலமான கயிற்றை விடுகிறான். இக்கயிறு வருகிறதைக் கண்டு மேலேற வேண்டுமென்னும் ஆத்திரத்தினால் வேரை விட்டுவிடுவானாயின் கிணற்றில் வீழ்ந்து விடுவான். பின் அவன் என்ன செய்ய வேண்டு மென்றால் கயிறு தன்னிடம் வரும் வரை வேரைப் பலமாகப் பிடித்திருந்து கயிறு வந்தவுடன் கயிற்றை ஓர் கையினாற் பலமாகப் பிடித்துக் கொண்டபின் வேரை விடவேண்டும். அப்போது மேலிருப்பவன் கயிற்றை மேலிழுக்க இவன் மேலே வந்துவிடுவான். இதல்லாமல், இவன் கிணற்றுக்குள்ளிருக்கும் வேரை ஒரு கையிலும், கயிற்றை ஒரு கையிலும் பிடித்துக் கொண்டிருந்தால் மேலும் வர மாட்டான் கீழும் போகமாட்டான். நடுவிலே தயங்குவான். ஆதலால் கயிறு கிடைத்தவுடன் வேரை விட்டுவிட வேண்டும். இதுபோலத் தாஷ்டாந்தத்தில் ஜன்மமென்னுங் குழியிலொருவன் விழுந்து விட்டான். அவன் வருணாச்சிரம தரும மென்னும் வேரைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறான். அப்போது குருவென்னுமொருவர் ஞான மென்னுங் கயிற்றை உள்ளே விடுகிறார். அது வருகிறதென்னும் ஆத்திரத்தினாற் வருணாச்சிரம தருமமென்னும் வேரை விடுவானாயின் ஜன்மக் குழியில் விழுந்து விடுவான். ஆதலால், ஞானமென்னுங் கயிறு வந்தவுடன் பலமாகப் பிடித்துக் கொண்டு பின் வருணாச்சிரம வேரை விட வேண்டும். ஞானம் வந்ததும் வருணாச்சிரம பந்தமிருக்குமானால் அவன் ஒருநாளுங் கிணற்றி லிருந்து மேலேறப் போகிறதில்லை. இது சுருதி யுக்தி அனுபவம் என்னும் மூன்றிற்குஞ் சம்மதமாம். மோட்டார் வண்டி ஏறுவதற்குப் பணமிருக்க ஏன் கட்டை வண்டியேற வேணும். அதுபோல், ஆத்ம ஞானமடையச் சாமர்த்தியமிருக்க ஏன் வருணாச்சிரம தரும மனுஷ்டிக்க வேண்டும். அப்படி மோட்டார் வண்டியில் போகிற ஒருவனைக் கட்டை வண்டியில் போகிற ஒருவன் ஏன் நீ மோட்டாரில் போகிறாய்; என்னோடு கட்டை வண்டியில்தான் வர வேண்டுமென்றால் அதற்கு என்ன பதில் சொல்லலாம். அதுபோல் ஆத்ம ஞானம் என்னும் மோட்டார் வண்டியிற் போகிற ஒருவனை



வருணாச்சிரமக் கட்டை வண்டிகாரன் என்னுடைய வண்டிக்கு வாவென்றால் நாமதற்கு என்ன செய்யலாம். அவனுக்கு மோட்டாருக்குப் பணமில்லை. அதனால் பணமிருக்கிறவனையுங் கூப்பிடலாமா? கூப்பிடுதல் அவனுடைய புத்தி ஈனமும் வினயசம்பத்தில்லாததினாலுமாகும். ஆனால் அவன் கூப்பிடலாம், கூப்பிட்ட பின் இவன் என்னிடம் பணமிருக்கிறது எனக்கது தேவையல்ல வென்றால் அதையாவது கேட்க வேண்டாமா? பின்னும் இதைப் பற்றிய அதிவிரைவாகவும், சுருக்கமாவும், தெளிவாகவும் சொல்லுகிறேன். வருணாச்சிரம தருமம் இன்னு மெதுவரை வேண்டுமெனிலோ அதையும் சொல்லுகிறேன். ஓர் பாதையில் ஓர் மாஞ்செடி வைத்திருக்கிறது. அது சிறியதாயிருப்பதால் ஆடு மாடுகள் மேய்ந்து கெடுத்து விடுமென்று மதில் வைக்கிற வழக்கம். அந்த மதில் எதுவரை வேண்டும் மரம் பெரிதாகும் வரையே. அப்பால் வேண்டியதில்லை. அதுபோல், ஞானமென்னுமோர் மாஞ்செடி வைத்திருக்கிறது. அதை உலக பாசங்களான மண், பெண், பொன் முதலிய ஏடணாத்திரயங்களென்னும் ஆடு மாடுகள் மேய்ந்து கெடுத்துவிடாதபடி வருணாச்சிரம தருமமென்னும் மதில் வைக்க வேண்டும். ஞான மாஞ்செடி பெரிதான பின் வேண்டுமோ? வேண்டாம். பின் ஞானம் வர ஆரம்பிக்கும்போது கரும காண்டத்தை அனுஷ்டித்தல் கூடாது. ஏனெனில் இருக்கும் ஞானத்தையுங் கெடுத்து விடும். எப்படி யெனில், ஞானமோ அந்தர்முக வேலை. கர்மமோ பகிர்முக வேலை. ஞானமோ அபேதம். கர்மமோ பேதம். ஞானமோ சுகம். கர்மமோ துக்கம். ஞானமோ அகண்டம். கர்மமோ கண்டம். ஞானமோ முடிவு. கர்மமோ ஆரம்பம். இன்னும் இதுபோன்ற விஷயங்களிலும் ஞானமே பிரபல சுருதிகளில் மேலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது என்னுடைய அபிப்பிராயமல்ல. வியாச பகவான் கூறிய பிரஸ்தானத் திரயத்துள் ஒன்றான பிரஹ்ம சூத்ரம் நான்காம் அத்தியாயத்திலும், ஸ்ரீ பகவத்கீதையில் பகவானாலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

உய்வகையோகமொருப்படுவார்க்கது
கைவருமாசெயல்காரணமேகாண்
மெய்வகையோகம்விளைந்தபின்மெய்யே
செய்வனவானவைதீமையவேயாம் (பகவத் கீதை)

பின்னும் பற்பல ஆசாரியர்களாலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றை இங்கு கூறச் சாவகாசமில்லை. பின்னும் வாயினால் ரொம்ப சாமர்த்தியமாகவும், சர்வ சாஸ்திர சம்பன்னனாகவும் பேசி விட்டால் ஞானமா?

அப்படிச் சாஸ்திரம் படித்ததெல்லாம் இப்போதுஎனக்கு விரோதமாகத் தெரிகிறது.ஏனெனில், எனக்குச் சாஸ்திரம் தெரியாமற் போனால் ஒருவருடனும் பேசாமல் மனதைச் சமாதியிலேயே யிருத்துவேன். சாஸ்திரந் தெரிந்ததினால் தானே பேச வேண்டி வந்தது. ஆனாலும் உலக உபகாரந்தானே. ஞானிகளில் மூன்று விதம். அதாவது, உத்தம, மத்திம, அதமமென்னும் மூன்றுவிதப் பிராரத்த முடைய ஞானிகள், எப்போதுஞ் சமாதியில் இருக்கும் முயற்சியிலே யிருப்பவன் உத்தமன். சமாதி முயற்சியும் உலக உபகாரமுமா யிருப்பவன் மத்திமன். வியாபாரம், இராஜ்ய பரிபாலனம், கிருஷி முதலிய காரியங்களைச் செய்பவன் அதமன். அதாவது சுகர், தத்தாத்திரேயர், உத்தவர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் முதலிய வர்கள் உத்தமர்கள். வசிஷ்டர், வியாசர், உத்தாலகர், யாக்ஞவல்லியர், பராசரர், நாரதர், விவேகானந்தர் முதலியவர்கள் மத்திமர்கள், ஜனகராஜா, கிருஷ்ணன், இராமன், இட்சுவாகு, பகீரதன், அருச்சுனன் முதலியவர்கள் அதமர்கள். ஆனால் எல்லோருக்கும் முக்தி சமமே. ஆத்ம சுகம் மாத்திரம் ஏற்றக் குறைச்சலாக இருக்கும். பின்னும் வருணாச்சிரம தருமங்கள் சித்தசுத்திக் கேது வென்று சொல்லலாம். அதாவது, ஐ.சி.எஸ். பாஸ் பண்ணினவர்தான் கலெக்டர் வேலைக்குப் போகலாம். பி.ஏ.பி.எல் பாஸ் பண்ணினவர்தான் ஐக்கோர்ட்டு வக்கீல் வேலைக்குப் போகலாமென்பது போலவும், ஞான அதிகார லக்ஷணங்கள் கூறியபடியுள்ளவனே ஞானத்துக்கு போகலா மென்று சொல்லலாம். வருணாச்சிரம பேதமிருக்கும் வரை ஒருவருக்கும் ஞானமுண்டாகிறதில்லை. ஞான முண்டாகாமல் வருணாச்சிரம பேதமும் போகிறதில்லை. அது எதுபோலெனில், திருச்சினாப் பள்ளிக்கு மெட்றாஸ் மெயில் வரவும் ஈரோடு மெயில் போய்ச் சேரவும் சரியாயிருக்கிறது. அதுபோல் ஞானம் வரவும், வருணாச்சிரம பேதம் போகவும் சரியாயிருக்கிறது. ஆஸ்ரமங்களாலும், வருணங்களாலும் ஞானமுண்டாகிறதில்லை. அப்படி இருக்குமானால் எல்லா வருணத்தார்களுக்கும் ஞானமுண்டாகவில்லையே. ஆனால் சந்நியாசம் செய்து கொள்ள வேண்டும் அதனால் ஞானம் வருமென்று



சொல்லுகிறார்கள். சந்நியாசமென்றால் தலை மொட்டையடித்துக் காவி பூண்டு ருத்ராக்ஷதாரணஞ் செய்து புறப்படுவதல்ல. மனதி னின்று சர்வ இச்சைகளையும் விட்டு நிருவாணியாயிருத் தலாம். ஆதலால் அதுவே ஞானத்துக்கு நேர் சாதனமாம். ஞானமில்லாத மனிதர்கள் உலகத்தில் ஒருவருங் கிடையாது. ஆத்ம ஞானமென் றால், கோவிலுக்குப் போய் வருதல், புஷ்பந் தொடுத்து விக்கிரகங் களுக்குச் சாத்துதல், தீர்த்த யாத்திரை செய்தல் முதலியன அல்ல. பின்னோ, மனதை ஆத்மாவினிடத்தே இருக்கச் செய்வதேயாம். ஆசையை விடாமல் ஒருவரும் ஞானமடைய முடியாது. ஆசையுடன் ஞானமடையலாமென்று சிலர் சொல்வார்கள். அவர்கள் கூறுகிறபடி அடையலாம். எப்படியென்றால், இரண்டு எவ்வன ஸ்திரிகள் கூடி புத்திரனுண்டாகுமானால் ஆசையோடு ஞானமுமுண்டாகும் ஆதலால் ஆசையுள்ளவனுக்கும் ஞானமுண்டாகிறதில்லை. ஞான முள்ளவனுக்கும் ஆசையுண்டாகிறதில்லை. எப்படியெனில், அரையணாவுக்கு வாங்குகிற புளித்த மாம்பழந்தின்ற ஒருவன் அதையே பெரிதாக நினைக்கிறான். அவன் இரண்டணா சேலம் மாம்பழந் தின்றபின் அரையணா பழத் திலிச்சை வருகிறதேயில்லை. அதுபோல் ஸ்திரீகள் செல்வம் முதலிய அரையணா மாம்பழச் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற நாம் ஆத்ம ஞானமென்னும் இரண்டணா மாம்பழம் சாப்பிடும் வரை அரையணா மாம் பழமான ஸ்திரீ முதலான இச்சை விடுகிறதில்லை. பின்னும் லண்டன் மாநகரிலிருக்கக் கூடிய 250 கோடி ரூபாய் ஸ்திதியுள்ள ஒரு துரை ஈரோடு நீசப் பெண்ணை விவாகஞ் செய்வாறா? செய்கிறதில்லை. ஏனெனில், ஜப்பான், ஜெர்மனி, பிரஞ்சு, அமெரிக்கா, இட்டாலி, டர்க்கி, சைனா, பாம்பே, மெட்றாஸ் முதலிய இடங்களிலுள்ள அழகான ஸ்திரீகளை யெல்லாம் விட்டுப் பட்டிக்காடான ஈரோட்டில் அதிலும் அழகில்லாத ஏழை வீட்டு நீசப் பெண்ணை விவாகஞ் செய்கிறதில்லை. அப்படி விவாகஞ் செய்வாரேயானால் அவர் லார்டு துரையுமல்ல. அதுபோல அநித்திய ஜட துக்க மல பாண்டமான ஸ்திரீகளை ஆத்மஞானி களிச்சிக்கிறதில்லை. இச்சித்தால் ஆத்ம ஞானியுமல்ல, பின்னும் இல்லற ஞானிகள் வருணாச்சிரம தருமங் களை விடாமலனுஷ்டித்தார்களே என்ற சங்கை உங்களுக்குண்டாக லாம். அவர்களுக்கு மனதில் வருணாச்சிரம பேதங்களில்லை. ஆனால், அவர்கள் பிராரத்தம் அவர்களை இல்லறத்திலிருக்கும்படி செய்கிறது. ஆனாலும், அவர்கள் மூடத்தன்மையான உலக

மனுஷ்யர்களுக்காகத் தானும் வருணாச்சிரம தருமங்களை அனுஷ்டிக்கிறதாக நமக்குத் தெரிகிறது. அது அவர்களிடத்தி லில்லை. எப்படியிருந்தாலும், துறவர ஞானியே பெரிதென்று நான் சொல்வேன். ஏனென்றால் இரண்டு எவ்வன புருஷர்கள் இரண்டு எவ்வன ஸ்திரீகளை விவாகஞ் செய்துக் கொண்டு வந்து இரண்டு ஏழாவது மாடி வீட்டில் வைத்தார்கள். ஒருவன் ஏழாவது மாடியில் மனைவியோடு சுகித்துக் கொண்டிருக்கிறான். ஒருவன் கீழ் மாடியில் குடும்ப விவகாரம் பண்ணுகிறான். யாருக்கு பெண் சுக மதிகங் கிடைக்கும்? மேல் மாடியிலிருந்தவனுக்கே தான். கீழ் மாடியி லிருந்தவனுக்கு மனைவியின் சுகங் கிடைக்கிறதில்லை. ஆனால் மனைவியென்ற பாத்தியம் இரண்டு பேருக்கும் ஒன்றுதான். இதுபோல் இரண்டு அப்பியாசிகள் ஞானமென்னும் ஸ்திரீயை விவாகம் பண்ணி வந்து சுயேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்த பாவனை, துரியம் என்ற ஏழு மாடி வீடு கட்டி அதில் வைத்தார்கள். ஒருவன் ஏழாவது மாடியில் ஞானப் பெண்ணுடன் சுகிக்கிறான். மற்றொருவன் சாக்கிராவஸ்தை என்னுங் கீழ் மாடியில் குடும்ப வேலை பார்க்கிறான். யாருக்கு ஞான சுக மதிகங் கிடைக்கும்? மாடி வீட்டிலுள்ளவனுக்கே. கீழ் வீட்டிலுள்ள வனுக்கு ஞான சுகங் கிடைக்கிறதில்லை. ஆனால் ஞான மாத்திர மிருவருக்குஞ் சமம்.

இதில் மாடிமேலிருந்து சுகிக்கிறவன் துறவற ஞானி. கீழ் மாடியிலிருக்கிறவன் இல்லற ஞானி. இக் காரணங்கொண்டே துறவறஞானி பெரிதென்று சொன்னேன். நான் உங்களுக்கு எவ்வளவு ஞானம் சொன்னாலும் இப்போதுதானிருக்கும்.பின் போய்விடும் எப்படி என்றால் ஓர் பாசி நிறைந்த குளத்தில் கல்லைப் போட்டால் பாசம் விலகும். கல் உள்ளே போனபின் பாசம் மூடிக்கொள்ளும். அதுபோல மனதென்னு முங்கள் குளத்தில் அஞ்ஞானமென்னும் பாசி மூடியிருக்கிறது. அதில் நான் ஞான வார்த்தைகளென்ற கல்லைப் போடுகிறேன். இவ்வார்த்தை என்னுங் கல் உள்ளே போனபின் உங்கள் மனமென்னும ஜலத்தை அஞ்ஞான பாசி மூடிக் கொள்ளும். ஆனால் அக்குளத்தில் குளி தாமரையைப்போட்டு விட்டால், சிறிது தினங்களில் பாசியைத் தின்றுவிடும். அதுபோல நீங்களும் உங்கள் மனமென்னும் ஜலத்தின்மீது ஞானமென்னுங் குளி தாமரையை போட்டு விடுங்கள். அது சிறிது காலத்தில் அஞ்ஞான பாசத்தை



தின்றுவிடும். பின், சர்வ சாஸ்திரங்கள் படித்ததினால் ஞான முண்டாகுமோ என்று ஒருவர் கேட்ட சங்கைக்குச் சமாதானஞ் சொல்லுகிறேன். ஒருவனுக்கு லண்டன் போக வேண்டுமென்று ஆவல் கொண்டு பிளான் படிக்கிறான். அதனால் லண்டன் போனதாக ஆகுமா? ஆகிறதில்லை. பின் அவன் லண்டன் போகவேணுமானால் அதிகமான திரவியம் வேண்டும். ஆதலால், மூன்று ரெயில் சந்திக்கிற இடங்களில் காப்பி ஹோட்டல் வைத்துப் பணம் சம்பாதித்துக் கொண்டு ரெயிலேறிச் சென்னைபோய் அங்குள்ள சென்ட்ரல் ஸ்டேஷனில் ரெயிலேறி பம்பாய் சென்று அங்கிருக்கும் ஹார்பர்போய் அங்குள்ள ஸ்டீமேறி லண்டன் போக வேணும். அதுபோல முத்தி யென்ற லண்டனுக்குப் போக வேண்டுமானால் ஞான வாசிஷ்டம், பிரஹ்ம சூத்ரம், பகவத்கீதை, கடம், முண்டகம், மாண்டூக்யம், தைத்திரியம், பிரகதாரண்யம், சுவேதாஸ்வரம், சாந்தோக்யம், ஜாபாலம், கைவல்யம் முதலிய உபநிஷத்துக்கள்; ஈஸ்வரகீதை, பிரம்மகீதை, உத்திரகீதை, சங்கரகீதை, குருகீதை, சூதகீதை, இராமகீதை, ரிபுகீதை, சிவகீதை முதலிய 18 கீதைகளும். இன்னும் மற்றுமுள்ள பற்பல பிரபல சாஸ்திரங்களைப் படித்தால் போதாது. இவைகளெல்லாம் முக்தியென்னும் லண்டனுக்குப் பிளான்களாம். இந்தப் பிளான்களான சாஸ்திரங்களை நன்றாய்ப் படித்ததனால் முக்திக்குப் போனதாக ஆகிறதில்லை. ஆதலால், முன் சொன்ன லண்டனுக்குப் போக பணம் சேர்த்ததுபோல முக்தி என்னும் லண்டனுக்குப் போக ஏகாக்கிரம் என்ற பணம் சேர்க்க வேண்டும். அதற்குச் சாத்துவீகம், இராஜசம், தாமதம், என்னும் மூன்று ரெயில் சந்திக்கிற சுழுமுனை பிரம்மரந்திரம், சூனியாகாசம், முதலிய ஜங்ஷன்களில் பிராக்டீஸ் (அப்பியாஸம்) என்ற காப்பி வோட்டல் வைத்து ஏகாக்கிரம் என்ற பணம் சேர்க்க வேண்டும். பின் பிளான் பார்த்த இடம் அஞ்ஞானம், குதிரை வண்டியேறுதல் சகாம கர்மம். ஸ்டேஷனில் வந்து இறங்குவது நிஷ்காம கர்மம். ரெயில்வே ஸ்டேஷன் சித்த சுத்தி. ஸ்டேஷன் மாஸ்டர் குரு. அவர் கொடுத்த டிக்கெட் உபதேசம். நாம் கொடுத்த பணம் ஏகாக்கிரம், ரெயிலேறுதல் சமாதி பழகுதல். திருச்சினாப்பள்ளி சவிகற்பசமாதி. மெட்றாஸ் நிருவிகற்ப சமாதி. சென்ட்ரல் ஸ்டேஷன் நனவிற் சுழுத்தி. அதாவது தூங்காமற் தூங்குதல். பம்பாய் சகசநிஷ்டை. லண்டன் முக்தி. இப்படி முக்தியையடைய வேண்டும். சாஸ்திரத்துக்கும் முக்திக்கும் இவ்வளவு பேதமும் தூரமு மிருக்கிறது. ஆனால் பிளான் பார்த்த

ஒருவன் பிளான் பார்க்காமலொருவன் ஆக இருவரும் ரெயிலேறி மதராசுக்கு போகிறார்கள். சேலம் போனவுடன் இருவருமிறங்கி காப்பி ஹோட்டலுக்கு போனவுடன் முதல் மணி அடித்ததைக் கேட்டு பிளான் பார்த்தவன் இன்னுமிரண்டு நிமிஷ நேரமிருக்கிறது என்று தைரியமாய் காப்பிச் சாப்பிடுவான். பிளான் பார்க்காதவன் பயந்து ஓடி வருவான். ஆதலால் பிளான் பார்த்து போகிறது தைரியமிருக்கும். இதுபோல சாஸ்திரம் பார்த்து ஒருவன் ஞானமடைகிறான். பார்க்காமல் ஒருவன் ஞானமடைகிறான். இருவருக்கும் வித்தியாசமிதுவே. பின், முதலில் ஒருவர் என்னிடம் ஞானிக்கு பிராரத்தமுண்டா? இல்லையா? வென்றார். இல்லை யென்றேன். அதனால் அவருக்கு சந்தேகந் தீரவில்லை. அதற்கு நன்றாக விளங்கும்படி திருஷ்டாந்தங் கூறுகிறேன். அதாவது :- மழை நன்றாகப் பெய்யும்போது இரண்டு மனிதர்கள் மழையில் நடக்கிறார்கள். அதில் ஒருவன் பலமான குடை பிடித்துக் கொண்டு நடக்கிறான். ஒருவன் குடையின்றி நடக்கிறான். இரண்டு பேர்களுக்கும் மழை பெய்தே தீரும். ஆனால் குடையிருக் கிறவன்மீது மழைபடுகிறதில்லை. மழை குடையில விழுந்து போகிறது. குடையில்லாதவனுக்கு மேலே விழுகிறது. இதுபோல இரண்டு மனிதர்கள் உலக சுகதுக்கமென்னும் மழையில் நடக்கிறார்கள். அதில் ஒருவன் சுகானுபவ மென்னுங் குடை பிடித்துக் கொண்டு நடக்கிறான். ஆதலால் அவன்மீது பிராரத்த மழை விழுகிறதில்லை. ஆனதால் பிராரத்தமில்லை யென்றே சொல்ல வேண்டும். பார்ப்பவருக்கு மழை பெய்கிறதுபோலவே தோற்றும். ஆனால் அவன் மேலே படுகிறதில்லை. குடையுள்ளவன் ஞானி. குடையில்லாதவன் அஞ்ஞானி. ஞானி பிராரத்தத்துக்கும், அஞ்ஞானி பிராரத்தத்துக்கும் பேதமிதுவாம். பின்னும் நாம் நம்மை எப்போதும் தாழ்ந்தவனாகவே நினைத்தல் கூடாது. உயர்ந் தவனாகவே நினைக்க வேண்டும். அதாவது, தூலசூக்ஷும காரண சரீரங்களை நானென்றெண்ணாமல் ஆத்மாவே நாமென் றெண்ண வேண்டும். எல்லா மதங்களையும் ஒன்றாக நினைக்க வேண்டும். ஏனெனில் எல்லா மதங்களும் கடவுளை நோக்கிச் செல்லும் பாதைகளாம். சர்வ மதங்களையுஞ் சாரமாக நினைக்க வேண்டும். எல்லா மதாசாரியர்களையும் சமமாகப் பார்த்தல் வேண்டும். ஒவ்வொரு மதங்களின் முடிவும் பிரஹ்ம மென்றே நினைக்க வேண்டும். ஒரு மதத்திலும் துவேஷம் கூடாது. எப்போதும் எல்லா விஷயங்களிலும் எல்லோரிடத்திலும் சமரசமாகவே இருக்க வேண்டும். இதுவே



என்னுடைய அபிப்பிராயம். நாம் எப்போதும் முயற்சியை பெரிதாக நினைக்க வேண்டும். முயற்சியினாலேயே எல்லாமுண்டாகிறது. நாமே நம்முடைய முயற்சியினாலேயே இந்திரனாகலாம், சந்திரனாகலாம், பிரம்மாவாகலாம், சிவனாகலாம், விஷ்ணுவாகலாம், மாயையாகலாம், பிரஹ்மமேயாகலாம். அதற்கு என்ன பிரமாண மென்றால் முன் நகுஷன் என்னும் ஓரரசன் முயற்சியினால் இந்திரனானான். ஹனுமாரும் முயற்சியினாலே பிரம்ம பட்டத்துக் காளானார். அதாவது ஓர் மனிதன் 100 அஸ்வமேதயாகஞ் செய்தால் இந்திரனாகலாம். இந்திரன் 100 இராஜசூய யாகஞ் செய்தால் ருத்ரனாகலாம். ருத்ரன் 100 அஸ்வமேதஞ் செய்தால் பிரம்மாவா கலாம். பிரம்மா 100 நரமேதஞ் செய்தால் விஷ்ணுவாகலாம். சர்வ மனிதர்களும் தங்கள் சங்கற்பநாசஞ் செய்தால் பிரஹ்மமாகலாம். ஆவதென்றால் புதிதாயுண்டாவதல்ல. இருந்த இருப்பை யதார்த்த சமாதியிலறிவதாம். புதிதாக உண்டாவது நிலைக்கிறதில்லை. நான் இப்போது சொன்னது ஓர் மதத்தையும் சேர்ந்ததல்ல. உபநிஷத் வாக்கியங்களாம். நாம் அடைய வேண்டிய வழிகளை நம்முன்னவர் களான மஹரிஷிகளே ஏற்படுத்தி யிருக்கின்றனர். அதைத் தற்கால நாகரீக மதஸ்தர்கள் ஏற்பட்டு கெடுதியான பாஷ்யம் பண்ணித் தாறுமாறாக நடக்கிறார்கள். ஆதலால் எனக்குச் சநாதன தர்மமே பிரியம். நாம் ஒரு மதத்தையு மனுஷ்டிக்க வேண்டாம். ஏனெனில் அக்கிரந்தங்களில் வாதமும் அந்நியமத கண்டனமுமாயிருப்பதால் அனுபவமான விஷயங்களை மாத்திரஞ் சொல்லக் கூடிய கிரந்தங்களைக் குருமுகமாக விசாரித்து நித்திய பரமானந்த மோக்ஷ சாம்பிராஜ்யத்தை அடையக் கடவோம்.

இப்போது சாவகாசமில்லாததால் இன்னொரு தரம் வரும் போது நன்றாய் உங்களுடைய மனோயிஷ்டப்படி போதிக்கிறேன். இவ்வாறு இந்த உபந்யாசம் முடிந்தது.

-: ஓம் தத் ஸத் :-

மூர்த்திகளாகவாவது எண்ணக் கூடாது. சரீரம், இந்திரியம், பிராணன், மனம், அந்தராத்மா, கூடஸ்தன், மூலப்ரகிருதி இவைகளை தாண்டிச் சென்றால் என்னை அறிவீர்கள். நான் பிராமணன், க்ஷத்ரியன், வைஸ்யன், சூத்ரன், பிரம்மசாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன், சந்நியாஸம் என்ற எட்டு முடையவனல்ல. நான் புருஷனேயல்ல, ஸ்திரீ, நபும்ஸகனுமல்ல, எனக்கு மாதா பிதா கிடையாது, நான் பிறக்கவுமில்லை மரிக்கிறதுமில்லை. நான் ஒரே படித்தாக எப்போது முள்ளவன். வயதும் காலமும் எனக்கு கிடையாது. பஞ்ச கோசங்கள் ஐந்து அவஸ்தைகள் மூன்று சரீரங்கள் இவைகளுக்கும் அப்பாலுள்ள என்னை வெளியிற் பார்த்தால் எப்படிக் காண முடியும். பஞ்ச மூர்த்திகளும் மும்மூர்த்திகளும், திக் பாலகர்களும், நவக்ரகாதிகளும், சகல வேதங்களும், சர்வ சாஸ்திரங்களும், சூக்ஷ்ம ஸ்தூல பூதங்களும் என்னிடத்துலிருந்து உண்டாயின. எனக்கு குருவு மில்லை, சிஷ்யனுமில்லை, நானே எனக்கு குரு எனக்கு நானே சிஷ்யன், சூத்ரம், கோத்திரம், வேதம் சந்தஸ் இவைகள் எனக்குக் கிடையாது. இவைகளெல்லாம் ஆதியில் என்னிடத்திலிருந்தே உண்டாக்கப்பட்டது. என்னையன்றி ஒரு வஸ்துவும் அன்னியமாக கிடையாது. நான் எப்போது மிருக்கிறேன். இதனுண்மை உங்களுக்கு தெரிய வேண்டுமானால் நீங்கள் உங்களுடைய பலபல சஞ்சல எண்ணங்களையும் விட்டு சரீரம் இந்திரியம் மனம் மாயை முதலியவைகளை விட்டு இம்மலையின் அதிபதியைத் தியானித்துக் கொண்டு அந்தர் முகத்தில் பார்ப்பீர்களானால் தெரிந்து விடும். பேத புத்தியோடு சஞ்சல சுபாவத்துடன் பார்ததால் அறிய மாட்டீர்கள். ஆத்ம ஸ்வரூபமாகிய உங்களை யறிய வொட்டாது உங்களை மூடிக் கொண்டிருக்கிற சகல தத்துவங்களையும் விலக்கி விட்டு உங்களது சொரூபத்தை நீங்களறிந்து கொள்ளுகிறபோது என்னையுமறிவீர்கள். அப்பால் பகிர்முகத்திற்கு வரும்போது சகலமும் பிரம்ம வஸ்துவாகவே தோன்றும். இதுதான் சகஜ ஸமாதி.

அனித்தியத்தி லிருந்து கொண்டே நித்தியத்தை யறிய வேண்டி ஜீவர்களுக்கு அவரவர் கர்மானு குணமாக தேவ சரீரமோ மனுஷ்ய சரீரமோ கிடைக்கின்றன. கர்ம பலத்தை ஆதாரமாகக் கொண்டே தேவரூபிகளான மும்மூர்த்திகளும், நவக்ரகாதிகளும், கால தேவதையும் ஜீவ சரீரங்களுக்குப் போக போக்கியாதிகளையும் நிக்ரகானுக்ரகங்களையும் செய்கிறார்கள். நாமே பலவித ரூபத்துடன்



பலபல காலங்களில் பலபல காரணங்களை உத்தேசித்து தோன்றி யிருக்கிறோம். அவைகளையெல்லாம் நீங்கள் பார்த்திருக்கிறீர் களல்லவா? எல்லாம் தெரிந்து ஒன்று மட்டுந் தெரியாதவனுக்குத் தான் உபதேசம் பயன்படும். இப்போது இந்த ரூபத்துடன் பார்க்கிறீர்கள். இதுதான் எனக்கு ரூபமா? இதை மறைத்துக் கொண்டு இன்னும் பலபல யுக காலங்களில் பலபல வேறு ரூபங்களாகத் தோற்றுவோம். அப்பொழுதெல்லாம் நீங்களும் என்னுடன் சகாய ரூபிகளாய்த் தோன்றபோகிறீர்கள். அவ்வப்போது பூலோகத்திலும், மேலுலகங்களிலும் அவதார புருஷர்கள் தோன்றி என்னைப்பற்றித் போதித்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். எதார்த்த சுபாவ பிரஹ்ம சுபாவத்துடன் நாநாவித சங்கல்ப ஜால மாயா ரஹிதர்களாகி அஸம்ப்ரக்ஞாத அனுபவத்தின் தன்னை யறிய வேண்டி உங்களுக்கு அனுக்கிரகம் செய்கின்றோம். மற்றொரு கலியுகம் வரும்பொழுது இவ்வாறே உங்கள் போலுள்ள உங்களுக்கு உபதேசிக்கப்படும்.

பரம ஆத்மாவைப் பற்றிய ரஹஸ்யங்களை உங்களக்கு உபதேசித்தாலும் அனித்திய உலகத்தில் அனித்திய சரீரத்துடன் அதிகாரத்தோடு கூடிய அவதார ஆண்டவன் உத்திரவின்படி நடக்க வேண்டிய சில கட்டளைகள் உங்களுக்கு இடப் படப்போகின்றன. சீக்கிரத்தில் இப்போதுள்ள இவ்வுலகம் வேறு உலகமாக மாறிவிடப் போகின்றது. ஆனதால் தேவரூபிகளாகிய நீங்கள் உங்களுக்கிட்டிருக் கும் கட்டளைகளை இந்த க்ஷணத்திலிருந்து வெகு துரிதமாக நிறைவேற்றுகிற விஷயத்தில் ஈடுபடும்படியாக உங்களுக்குக் கண்டிப்பான உத்திரவிடப்படுகிறது. எப்போது மழியாத பிரஹ்ம சொரூப திருஷ்டியினின்று மனோவிருத்தி கீழிரங்காமல் சகல கைங்கர்யங்களையும் செய்யுங்கள்.

தனது உடல் பொருள் ஆவி மூன்றையும் திரிவித கரணாதி களையும் தர்ம சாஸ்திர முறைப்படி எதார்த்தமாக குருமஹாராஜராகிய ஸ்ரீ பரமாத்மாஜிக்கு அர்ப்பித்திருக்கிற உத்தம ஜீவர்களை இச் சென்மத்திலும் மற்றெச் சென்மத்திலும் சகல விஷயங்களிலும் நாம் ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு தேசம் விட்டு மற்றொரு தேசம் செல்வதாலும் எத்தனை ஆலயங்கள், கிரிகள், பர்வத குகைகள் இவைகளிற் சென்று தபம் புரிந்தாலும் எத்தனை புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தாலும்

எத்தனை வேத சாஸ்திர புராணாதிகளை விஸ்தாரமாகக் கற்றாலும் இவைகளுக்கும் அப்பாற்பட்ட என்னை நீங்களறியப் போவதில்லை. உங்கள் ஹிருதய மத்தியிலுள்ள பெரிய குகைக்குள் சென்றால்தான் அறிய முடியும்.

சில காலங்களாகவே தேவதா ஹம்ஸ ரூபிகள் லோகக்ஷேமார்த்தம் நமது பாரத கண்டத்திலும் இதற்கன்னியமாகவுள்ள பல கண்டங்களிலும் ஆங்காங்கு அவதாரம் செய்திருப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? நீங்களும் அதுபோலவே உங்கள் சிரமத்தையும் மாதாவின் கர்ப்பத்திற் செல்லவேண்டுமே யென்ற கஷ்டத்தையும் விடுத்து லோகோபகார மாத்திரத்தை உத்தேசித்து அதிகார அவதார புருஷர் உத்திரவிடுகிறபடி ஆங்காங்கு பூமியில் அவதரிக்க வேண்டும். அக்காலத்தில் மாயாமயக்கங்கள் உங்களிடம் வந்தாலும் உங்களைப் பார்த்து விட்டு அவதார புருஷனென்று தெரிந்து விலகிவிடும். கஷ்டப்படுத்தாது. உங்களுக்கு சகாயமே செய்யும். உங்களுக்கு அஷ்டதிக் பாலகர்களும் நவக்ரகாதி தேவதைகளும் திரிமூர்த்திகளும் அவர்களது பிரதிநிதிகளும் அனுகூலங்களும் சகாயங்களும் செய்து கொண்டு வருவார்கள். காலம் அதிகமாகிற படியால் உங்கள் முன் இப்போது மறைந்து, இப்போதே ஸ்ரீசைலமல்லிகார்ஜுன பர்வதம் செல்ல வேண்டியிருப்பதால் நான் அந்தர்தியான மாகப் போகிறேன். நீங்களும் மறைந்து விடுங்கள். எல்லோரும் அவரவர்களுக்கிட்ட கட்டளைகளை நிறைவேற்ற வேண்டிச் செல்லுங்கள்.

-: ஓம் தத் ஸத் :-



பூதமும் புலன்களைந்தும் பொறிகளும் பிராணன் பத்தும்
ஓதலுமுள விஞ்ஞான உணர்ச்சிக்கு மெட்டாவென்னை
பூதரம் ஞானதேவம் புண்டரீகத்தினம்சம்
தாதலர் மலரோன்றந்தை தன்மய மென்பதென்னே?

துக்கமது சுகமதுவு மென்னில்லை
துரிய துரியாதீதந்தாண்டி நானும்
அக்கடவுள் நிற்குமிடம் நிற்பதாலு மணுவளவு
மின்ப துன்பந்தாக்கவில்லை
முக்கடவுள் மூவுலகமெது போனாலு மூளாது
துக்கமது வெந்தனுக்கே
தக்க வுரைவேதாந்தங்கீதையிதே சாற்றுமதை
நீர் தெளிவீருலகமென்னே?

**- ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமீஜீ**

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமீஜீ
திருவாய் மலர்ந்தருளிய

# வேதாந்த குயில்

1. ஸ்ரீ குருபாதந்தன்னைக் — குயிலே
சிந்தித்தார் புத்தியினால்

2. சிரசுமேலே வைத்தால் — குயிலே
தீர்ந்துடுங் ஜென்மவினை

3. வினைகள் போக்கவன்னோ — குயிலே
வினயம் வேணுமடி

4 கவலை யேதுக்கடி — குயிலே
கற்பித மாயையடி

5 முக்தி வேணுமென்றால் — குயிலே
யுக்தி வேணுமடி

6 பக்தி யுறைக்குமடி — குயிலே
சிரத்தை யாதாகுமடி

7 பிரமானந்தத்திலே — குயிலே
பூரணமானதடி

8 கவலை யில்லாட்டால் — குயிலே
கைவல்ய மாகுமடி

9 வெறுக்க வேணுமடி — குயிலே
விஷய போகங்களைத்

10 தடுக்கவேணுமடி — குயிலே
தத்துவ திருஷ்டியினால்

11. இளைக்க வேணுமடி — குயிலே
இந்திரிய விர்த்திகளை

12. பழக்க வேணுமடி — குயிலே
பக்தியின் மூலமதை

13. மனமும் பொய்யடியோ — குயிலே
தனமும் பொய்யடியோ

14. இனமும் பொய்யடியோ — குயிலே
இகமும் பொய்யடியோ



15. பரிபக்குவம் வந்ததென்றால் — குயிலே
மோகம் போகுமடி

16. மோகம் போகுமடி — குயிலே
ஏகமதாகுமடி

17. ஆசையில்லாட்டால் — குயிலே
அத்வைத மாகுமடி

18. மோசம் போகாதே — குயிலே
முன்னோர்கள் கண்டதடி

19. தத்வமஸி — குயிலே
தானான ஞானமடி

20. முக்திவந்ததடி — குயிலே
மும்மூர்த்தி சொன்னதடி

21. பற்றை விட்டாக்கால் — குயிலே
பாசமும் போகுமடி

22. பாசமும் போகுமடி — குயிலே
பாகமதாகுமடி

23. வாசனை யற்றதடி — குயிலே
வாராது வந்ததடி

24. முக்குணமாயையினைக் — குயிலே
மூன்றாகத் தள்ளிவிட்டால்

25. எக்குணமில்லையடி — குயிலே
ஏகாந்தமானதடி

26. பக்குவமான தடி — குயிலே
பரத்துவம் பெற்றதடி

27. சற்குணம் பெற்றாற்குக் — குயிலே
சாந்தந் துணையதடி

28. வாயால் பேசாதே — குயிலே
வார்த்தையிலொன்றுமில்லை

29. மாயாமயக்கமடி — குயிலே
மற்றொன்றும் வேண்டாதே

30. வித்தை வேண்டாமே — குயிலே
விரசம் வேண்டாமே

31. தத்தை போலானால் குயிலே
தத்துவங் காண்பாயோ

32. பற்றை விட்டதடி குயிலே
பாலபோதமடி

33. கற்றுவிட்டதடி குயிலே
கற்றதைக் கண்டதடி

34. வேதபோதமடி குயிலே
வேதாந்த நாதமடி

35. ஆதியனாதியடி குயிலே
அற்புதமான தடி

36. ஆசை கெடுக்குமடி குயிலே
அன்பைத் தொலைக்குமடி

37. நாசியுண்ணாக்கே குயிலே
நாதாந்தமானதடி

38. சூனியமில்லையடி குயிலே
சுத்த சொரூபமடி

39. தானுமேயற்றதடி குயிலே
தன்மயமான தடி

40. மனமழிந்தாக்கால் குயிலே
மாற்றில்லாத் தங்கமடி

41. தனையறிந்தாக்கால் குயிலே
தடையில்லை முக்திநிலை

42. அன்பினுச்சியிலே குயிலே
அத்வைத ரூபமடி

43. இன்பமில்லையடி குயிலே
இச்சையுமற்றதடி

44. அக்ஞான கோகிலத்தைக் குயிலே
ஆத்ம விசாரணையால்

45. பிரக்ஞானஞ் செய்தாற்குக் குயிலே
பழுதில்லை நிச்சயமே.

-: ஓம் தத் ஸத் :-